**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதாஎனவும்

- மன்றம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- மன்றத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 72 ஆம் பந்தியின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் கிரயம் தனித்தனியாக கணக்குகளில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கட்டிடத்திற்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கும் போது கூட்டுத்தொகை ரூபா 277,679,780 ஆன காணி மற்றும் கட்டிடங்களை மொத்தக் கிரயத்தில் 50 சதவீதத்தின் அடிப்படையில் 02 சதவீதப்படி பெறுமானத் தேய்வு செய்தல் நிறுவனத்தின் பெறுமானத் தேய்வு கொள்கையாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு முரணாக 2005 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை மொத்தக் கிரயப் பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடப் பெறுமதி ரூபா 42,678,276 மற்றும் ஆண்டின் | பதில் வழங்கப்பட வில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இற்கு இணங்க பெறுமானத் தேய்வு சரியாக மேற்கொள்ளப்பட டல் வேண்டும். |

மிகை ரூபா 2,776,798 குறைத்தும் திரண்ட பற்றாக்குறை ரூபா 39,901,478 அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் நடைமுறை வேலைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 26,377,072 ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பச்சலாக காண்பிக்கப்ட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மீதி ரூபா 5,812,134 இல் உள்ளடங்கிய 05 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 4,566,973 ஆன மீதியை அறவிட மன்றத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,210,314 ஆன செலுத்த வேண்டிய கடன் மீதியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத்தொகை ரூபா 7,742,490 ஆன மீதியை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மன்றத்தினால் எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 19 ஆம் இலக்க கொண்ட சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம் | | | |
| | (i) சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் ஏற்பாடுகள் | சட்டத்தின் நோக்கத்தை செயற்படுத்தும் போது அதிகாரம், பணிகள் மற்றும் கடமைகள் மேற்கொள்ளும் போதும் தேவையான தீர்மானம் எடுத்தல் மற்றும் மீளாய்வுகள் செய்வதற்காக மன்றத்தின் முகாமைத்துவ சபை மீளாய்வாண்டினுள் எவ்வித கூட்டங்களும் நடாத்தியிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | சட்டம் பிரகாரம் முகாமைத்துவக்கு மூக் கூட்டம் நடாத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| | (ii) சட்டத்தின் 14 ஆம் ஏற்பாடு | மன்றத்தினால் ஒவ்வொரு நிதி ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் 06 மாத கால எல்லலையினுள் அவ் ஆண்டினுள் மன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான விபரமொன்று காண்பிகப்கப்படும் அறிக்கையொன்றை அமைச்சருக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் அந்த அறிக்கை உரிய ஆண்டிற்கு பின்னர் வரும் ஆண்டில் இறுதிக்கு முன்னர் அமைச்சரால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | சட்டம் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிய அறிக்கையை அமைச்சர் பாராளுமனறத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை. | | | |
| | (i)நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) | உப கட்டு நிதியொன்றை அதனை வழங்கிய கடமை நிறைவேற்றப்பட்ட உடனனே தீர்க்கடேிய பொதும், 2010 முதல் 2015 காலப் பகுதியினுள் வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,004,958 ஆன முற்பணத்தை தீர்ப்பதற்கு 2024 திசெம்பர் 31 வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் உப கட்டுநிதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii)நிதிப் பிரமாணம் 756, 757(2) | 2021 ஆண்டிற்காக பண்டக கணிப்பீடொன்றை மேற்கொண்டு உரிய கணிப்பீட்டு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் பண்டக கணிப்பீடொன்றை மேற்கொண்டு கணிப்பீட்டு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவெண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை. | | | |
| | XXIX அத்தியாயத்தின் 13 ஆம பிரிவு | 2016 ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 1,415,800 ஆன விழா முற்பணத்தை 2024 திசெம்பர் 31 வரை மீள் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | நிலுவை விழா முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஈ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய இலக்கம் PED/12 கொண்ட அரச பொது முயற்ச்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தி | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2024 நவம்பர் 18 திகதி சமர்ப்பித்திருக்காததுடன் | பதில் வழங்கப்பட வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை இந்த அறிக்கையின் திகதி வரையும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (உ) | 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றிக்கை | மன்றத்தினால் 2021 முதல் 2025 வரையான ஆண்டுகளிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | சுற்றிக்கை பிரகாரம் வருடாந்தம் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வெண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,840,051 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,759,732 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,080,319 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரச மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரம்பொட தொண்டமான் கலாச்சார நிலையத்தில் நடாத்திச் செல்லப்பட்ட 06 முழு நேர பாடநெறிகள் நிதிஏற்பாடு இல்லாமையினால் 2015 ஆண்டு முதல் அந்த பாடநெறிகளை நடாத்துவ நிறுத்தப்பட்டிருந்தன. மேலும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் 216 பாடசாலை மாணவர்களுக்கு ஆரம்பிக்கப்பட்ட 03 பாடநெறியில் கற்கை நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 திகதி அளவில் நிறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு முழுநேர பாடநெறிகளில் கற்கை நடவடிக்கைகள் நடாத்தப்படாமையினால் 72 மாணவர்களை கொண்ட பெண்கள் விடுதி மூடப்பட்டு விளைவற்று நிலவியது. | பதில் வழங்கப்பட வில்லை. | சொத்துக்களை உச்ச வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். |